# குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த
# பெருமாள் திருமொழி

## ஐந்தாம் திருமொழி - தருதுயரம்
## விற்றுவக்கோட்டம்மான் விஷயமாக: ஆழ்வார் தமது ஆகிஞ்சந்ய அநந்யகதித்வங்களைத் தெரிவித்தல்

** தரு துயரம் தடாயேல் * உன் சரண் அல்லால் சரண் இல்லை *
விரை குழுவும் மலர்ப் பொழில் சூழ் * விற்றுவக்கோட்டம்மானே! **
அரிசினத்தால் ஈன்ற தாய் * அகற்றிடினும் * மற்றவள் தன்
அருள் நினைந்தே அழும் குழவி * அதுவே போன்றிருந்தேனே 1

கண்டார் இகழ்வனவே * காதலன் தான் செய்திடினும் *
கொண்டானை அல்லால் * அறியாக் குலமகள் போல் **
விண்தோய் மதிள் புடை சூழ் * விற்றுவக்கோட்டம்மா! * நீ
கொண்டாளாய் ஆகிலும் * உன் குரைகழலே கூறுவனே 2

மீன் நோக்கும் நீள்வயல் சூழ் * விற்றுவக்கோட்டம்மா! * என்
பால் நோக்காய் ஆகிலும் * உன் பற்றல்லால் பற்றிலேன் **
தான் நோக்காது * எத்துயரம் செய்திடினும் * தார்வேந்தன்
கோல் நோக்கி வாழும் * குடி போன்றிருந்தேனே 3

வாளால் அறுத்துச் சுடினும் * மருத்துவன் பால் *
மாளாத காதல் * நோயாளன் போல் மாயத்தால் **
மீளாத் துயர் தரினும் * விற்றுவக்கோட்டம்மா! * நீ
ஆளா உனதருளே * பார்ப்பன் அடியேனே 4

வெங்கண் திண்களிறு அடர்த்தாய்! * விற்றுவக்கோட்டம்மானே! *
எங்குப் போய் உய்கேன்? * உன் இணையடியே அடையல் அல்லால் **
எங்கும் போய்க் கரை காணாது * எறிகடல் வாய் மீண்டேயும் *
வங்கத்தின் கூம்பேறும் * மாப்பறவை போன்றேனே 5

செந்தழலே வந்து * அழலைச் செய்திடினும் * செங்கமலம்
அந்தரம் சேர் * வெங்கதிரோற்கல்லால் அலராவால் **
வெந்துயர் வீட்டா விடினும் * விற்றுவக்கோட்டம்மா! * உன்
அந்தமில் சீர்க்கல்லால் * அகம் குழைய மாட்டேனே 6

எத்தனையும் வான் மறந்த காலத்தும் * பைங்கூழ்கள் *
மைத்தெழுந்த மாமுகிலே * பார்த்திருக்கும் மற்றவை போல் **
மெய்த்துயர் வீட்டா விடினும் * விற்றுவக்கோட்டம்மா! * என்
சித்தம் மிக உன் பாலே * வைப்பன் அடியேனே 7

தொக்கிலங்கு யாறெல்லாம் * பரந்தோடி தொடுகடலே *
புக்கன்றிப் புறம் நிற்க * மாட்டாத மற்றவை போல் **
மிக்கிலங்கு முகில் நிறத்தாய்! * விற்றுவக்கோட்டம்மா! * உன்
புக்கிலங்கு சீர் அல்லால் * புக்கிலன் காண் புண்ணியனே! 8

நின்னையே தான் வேண்டி * நீள்செல்வம் வேண்டாதான்
தன்னையே * தான் வேண்டும் * செல்வம் போல் மாயத்தால் **
மின்னையே சேர் திகிரி * விற்றுவக்கோட்டம்மா! *
நின்னையே தான் வேண்டி * நிற்பன் அடியேனே 9

** விற்றுவக்கோட்டம்மா! * நீ வேண்டாயே ஆயிடினும் *
மற்றாரும் பற்றில்லேன் என்று * அவனைத் தாள் நயந்து **
கொற்றவேல் தானைக் * குலசேகரன் சொன்ன *
நற்றமிழ் பத்தும் வல்லார் * நண்ணார் நரகமே 10

**குலசேகரப் பெருமாள் திருவடிகளே சரணம்**

---